


33 ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 33 | பாலம்: 08 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | APRIL 15, 2023

# புதிய நிதியாண்டில் $497 பில்லியன் முதலீடு!

கனடிய மத்திய அரசின் 2023-2024ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை கனடாவின் துணைப் பிரதமரும், நிதி அமைச்சருமான கிறிஸ்டியா ஃபிரிலாண்ட் (Chrystia Freeland) நாடாளுமன்றத்தில் 2023 மார்ச் 28இல் சமர்ப்பித்தார். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் பசுமைப் பொருளாதாரம் (Green Economy), சுகாதாரப் பாதுகாப்பு, உட்கட்டமைப்பு (Infrastructure). பொருளாதார நல்லிணக்கம் மற்றும் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகள் தொடர்பான பல்வேறு சவால்களை எதிர்கொள்ளும் வகையில் புதிய நிதியாண்டில் $497 பில்லியனை மத்திய அரசு முதலிடுகிறது.

இவ்வரவு-செலவுத் திட்டத்தில் 2022-2023ஆம் நிதியாண்டின் துண்டுவிழும் தொகையாக $43 பில்லியன் இருக்கும் எனவும், 2023-2034 நிதியாண்டின் துண்டு விழும் தொகையான $40.1 பில்லியன் இருக்குமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. இந்தத் துண்டுவிழும் தொகை 2027-2028ஆம் நிதியாண்டில் $14 பில்லியனாகக் குறைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த இலையுதிர்கால பொருளாதார அறிக்கையில் மத்திய அரசு 2027-2028ஆம் நிதியாண்டில் ஒரு சமநிலைப் படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தை எதிர்பார்க்கலாம் எனக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. தற்போதைய வரவு-செலவுத் திட்டத்தில் அது நடைமுறைச் சாத்தியமற்றதாகி உள்ளது. எப்போது ஒரு சமநிலைப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தை எதிர்பார்க்கலாம் என இதில் குறிப்பிடப்படவில்லை.

மத்திய அரசின் கடன் 2023-2024ஆம் நிதியாண்டில் $1.18 ரில்லியனாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு கனடிய மத்திய அரசிற்குப் பெரிய நிதிப் பற்றாக்குறை இருந்தபோதிலும் கனடாவின் கடனிற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திற்குமான வீதம் G7 நாடுகளிலேயே மிகக் குறைவானதாக உள்ளது குறிப்பிடத்



Prime Minister Justin Trudeau and Deputy Prime Minister and Minister of Finance Chrystia Freeland

தக்கது. இக்கடனிற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையேயான வீதத்தையே (Dept to GDP Ratio) ஓர் அரசாங்கத்தின் கடன்சுமையைத் திருப்பிச் செலுத்தும் திறன் தொடர்பாகக் குறிக்க பொருளாதார நிபுணர் பயன்படுத்துகின்றனர். கனடிய மத்திய அரசின் இந்த வீதம் 2022-2023 நிதியாண்டில் 42.4% ஆகவும், 2023-2024 நிதியாண்டில் 43.5%ஆகவும், 2024-2025 நிதியாண்டில் 43.2%ஆகி 2027-2028ஆம் நிதியாண்டில் 39.9%இற்கு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வரவு-செலவுத்திட்டம் இவ்வருடம் கனடாவில் ஓர் ஆழமற்ற பொருளாதார மந்தநிலை (shallow recession) ஏற்படும் எனவும், பின்னர் 2024இல் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் எனவும் தெரிவிக்கிறது. 2022இல் கனடாவில் 3.4% வலுவான பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. இது 2023இல் 0.3%ஆகக் குறைந்து 2024 ஆம் ஆண்டில் 1.5%ஆக அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


2022 மார்ச்சில் புதிய ஜனநாயகக் கட்சிக்கும் லிபரல் கட்சிக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட இரகசிய உடன்பாட்டிற்கு அமைய லிபரல் அரசு பல் மருத்துவ உதவி, மளிகைப் பொருள் மீளளிப்பு மற்றும் பசுமைப் பொருளாதாரம் ஆகியற்றில் முதலீடுகளைச் செய்ததால் இந்த வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்தே புதிய ஜனநாயகக் கட்சி வாக்களிக்கும் எனக் கூறியுள்ளது.

பழமைவாதக்கட்சி தங்களது கோரிக்கைகளான மேலதிக செலவினங்களைக் குறைத்தல், வரிகளைக் குறைத்தல், கட்டிட அனுமதிகளை விரைவுபடுத்தல் போன்ற எதையும் இந்த வரவு-செலவுத் திட்டம் செயற்படுத்தவில்லை. அதனால் பழமைவாதக்கட்சி இந்த வரவு-செலவுத் திட்டத்தை எதிர்த்தே வாக்களிக்கும் எனக் கூறியுள்ளது.

## 2023ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட முதலீடுகள்:

* புதிய மளிகைப் பொருள் மீளளிப்பு (Grocery Rebate) மூலம் குறைந்த வருமானமும், சுமாரான வருமானமும் கொண்ட, உதவி அதிகம் தேவைப்படும் 11 மில்லியன் கனடியர்களுக்கும், குடும்பங்களுக்கும் பணவீக்க நிவாரணத்தை 2023ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் வழங்குகிறது. இரண்டு பிள்ளைகள்

தொடர்ச்சி 05 பக்கம்






























MaRadha
HOTEL
Colombo | Sri Lanka
sales@maradha.lk | +94112550136



# For All Your Private Mortgage Needs

**8T Capital**

Mortgage Administration # 13073



**AYNGKARAN SIVA**
Business Development Manager
Mobile: (647) 670-0320
ayngkaran@8twelve.capital
Website: www.8Twelve.capital



**JUTHIS KUPER**
Broker Relations Associate
Mobile: (647) 670-2078
juthis@8twelve.capital
Website: www.8Twelve.capital

- NOT Income Driven
- NOT Credit Driven
- Equity Based Lender
- Common Sense Lending Approach
- Interest Only Payments
- Flexible Terms
- Commitment issued less than 24 Hours
- Fast Funding within 2 to 3 business days
- 1st Mortgages, 2nd Mortgages, Debt Consolidation & Refinances
- Construction & Contractor Programs
- Flexible & Creative
- No Hidden Fees or Bait and Switch

***Available 7 days a week***



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் நாடாளுமன்றில் வெற்றியடையுமா?

- விகிர்தன் -

அரசாங்கத்தால் கொண்டு வரப்படவிருக்கும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்குப் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் எதிர்ப்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இருந்தபோதும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் எதிர்வரும் 25ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே அமலில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு மாற்றாகப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டுவரப்பவுள்ளதாகவும் இச்சட்டம் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கடுமையிலிருந்து தளர்வானதாக இருக்கும் எனவும் அரசாங்கத் தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், பயங்கரவாத தடைச் சட்டத்தைவிட மோசமான சட்டமாக இப்புதிய சட்டம் அமைந்துள்ளதாகவும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. நாட்டிலுள்ள எதிர்க் கட்சிகள் மற்றும், ஆளும் தரப்பிலுள்ளவர்களும்கூட இச்சட்டமூலத்தை விமர்சிக்கின்றனர். மனித உரிமைகள் தொடர்பான உள்நாட்டு, சர்வதேச அமைப்புகளும் இதனை எதிர்க்கின்றன.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மோசமானது என்பதனால் இதனை எதிர்க்கும் ஆளுந்தரப்பு உறுப்பினர்களும் உள்ளதாக சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது. ஆளும் தரப்பினரோடு இணைந்து நாடாளுமன்றத்தில் இந்த சட்டமூலத்தை தோல்வியடைச் செய்வோம் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

1979இல் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டத்தைவிட மோசமான இந்த சட்டமூலம் அனைத்து வகையான ஜனநாயக உரிமையையும் நசுக்கும் வல்லமை கொண்டது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் சகல மாவட்டங்களிலும் 90 நாட்கள் தடுத்து வைக்கப்படுபவர்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் அதிகரிக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வாதிகார ஆட்சியை நாட்டில் ஏற்படுத்த இவ்வாறு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை அனைவரும் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டும் என்றும் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூல வரைபின் ஒருசில ஏற்பாடுகள் அரசியலமைப்பிற்கு முரணானவை எனவும், கட்சி என்ற ரீதியில் ஒருசில திருத்த பரிந்துரைகளை நீதியமைச்சரிடம் முன்வைக்கவுள்ள



தாகவும் பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

யுத்த காலத்தில் இயற்றப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் தற்போதைய சூழலுக்குப் பொருத்தமற்றதாக உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதேவேளையில் ஜனநாயகம், மனித உரிமைகளை பாதுகாக்கும் வகையில் புதிய சட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காகவே ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்ததாகவும், இதற்காக அரசாங்கம் எடுக்கும் சகல தீர்மானங்களையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அரசாங்கத்தின் தவறுகளை சுட்டிக்காட்ட தாங்கள் கடமைப்பட்டுள்ளதாகவும் சாகர காரியவசம் கூறுகின்றார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பில் சஜித் பிரேமதாச தலைமையிலான, நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடுமையாக விமர்சித்து வருகின்றது. அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் உள்ளிட்டவற்றை தடை செய்வதே இந்த சட்டத்தின் நோக்கம் என்றும், இதன் ஊடாக அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்கள் பயங்கரவாதிகளாகவே அடையாளப்படுத்தப்படுவர் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிக்கின்றது.

நீதித்துறை மேற்பார்வையின்றி நீண்ட காலக் காவலில் வைக்க அனுமதிக்கும் வகையில் இந்த சட்டம் காணப்படுவதாகவும் இது பயங்கரவாதத் தடைச் சட்டத்தைவிட மிகவும் கடுமையானது என்றும் கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கூறியுள்ளார். இந்த சட்டமூலத்தை ஆதரிக்கும் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தங்கள் நாட்டின் மீதும் அதன் மக்கள் மீதும் அன்பு இல்லாதவர்களாகக் கருதப்படுவார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பாதிப்பில்லாத செயல்களும் பயங்கரவாத செயல்களாக வகைப்படுத்தலாம் என்பதனால் போராட்டங்களை கட்டுப்படுத்த அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

பயங்கரவாதத்தின் வரையறை சர்வதேச தரங்களுடன் ஒத்துப்போவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள பேராயர், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமை மற்றும் கருத்துச் சுதந்திரத்தை மீறக்கூடிய விதிகளை அனுமதிக்க கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளார். பயங்கரவாதத்தின் வரையறை நீண்ட காலமாக ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினையாக உள்ளது என்றும், பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் பிரிவு 3 (1)இல் குறிப்பிடப்பட்டுள்ள பயங்கரவாதத்தின் வரையறையை மறுபரிசீலனை செய்யுமாறும், அரசாங்கத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்தின் வரையறையை மறுபரிசீலனை செய்யவும் வரையறைக்குள் வரும் செயல்களை தெளிவுபடுத்தவும் சுருக்கவும் குறிப்பிட்ட திருத்தங்களை பரிந்துரைக்கவுமே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அரசாங்கத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எதிர்ப்பாளர்களையும், செயற்பாட்டாளர்களையும் குறிவைத்து மௌனமாக்குவதற்கு பயங்கரவாதத்தின் பரந்த வரையறையை அரசாங்கம் பயன்படுத்த முடியும் என்று ஆணைக்குழு கருதுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பயங்கரவாதி என்று முத்திரை குத்தப்படலாம் என்ற அச்சம் காரணமாக, பொதுநலன் சார்ந்த விடயங்களில் பேசவோ அல்லது தங்கள் கருத்தை வெளிப்படுத்தவோ பலர் பயப்படுவார்கள் என்றும், இது ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கு உகந்ததல்ல என்றும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டம்

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

விளம்பரம்
VLAMBARAM
33ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: யசோதா குமாரகுலசிங்கம்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com

Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved



# புதிய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

உள்ள குடும்பங்களுக்கு மேலும் $467 வரையான பணமும், பிள்ளைகள் இல்லாத கனடியர்களுக்கு மேலும் $234உம், முதியோருக்கு மேலும், $225உம் சராசரியாகக் கிடைக்கும்.

* தொலைபேசி ரோமிங் கட்டணங்கள், நிகழ்ச்சி மற்றும் இசைக்கச்சேரிக் கட்டணங்கள், பயணப் பொதிகளுக்கான மிக அதிகமான கட்டணங்கள், சரக்குகளுக்கான நியாயமற்ற கட்டணங்கள் போன்ற, மறைவான மேலதிக கட்டணங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

* குற்ற வட்டி வீதத்தைக் குறைப்பதற்குப் பரிந்துரை செய்வதன் மூலம், கொள்ளையடிக்கும் தன்மையான கடன்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

* சிறு வணிக நிறுவனங்களுக்கான கடன் அட்டை பயன்பாட்டுக் கட்டணத்தைக் குறைப்பதுடன், கனடாவின் மிகப்பெரும் வங்கிகள் கனடியர்களுக்கு வழங்கும் வெகுமதிப் புள்ளிகளையும் பாதுகாக்கிறது.

* மேலும் அதிக எண்ணிக்கையான, வருமானம் குறைந்த கனடியர்கள் வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்வதைத் தன்னியப்படுத்துவதன் மூலம் அவர்கள் வருமானவரிக் கணக்கைச் சமர்ப்பிப்பதை இலகுப்படுத்தி, அவர்கள் உரிய உதவிக் கொடுப்பனவுகளைப் பெறுவதை உறுதிப்படுத்தும்.

* உயர்கல்வி மாணவர்கள் கல்விச் செலவைச் சமாளித்து, அவர்களது எதிர்பார்ப்புகளை அடைவதற்கு உதவியாக கனடா மாணவர் மானியத்தையும் (Canada Student Grants). வட்டியில்லாத கனடா மாணவர் கடனின் (Canada Student Loan) வரையறையையும் அதிகரிப்பது.

* இளம் கனடியர்கள் அவர்களது முதல் வீட்டைக் கொள்வனவு செய்வதற்கு உதவியாக Tax-Free First Home Savings Account என்ற புதிய கணக்கை 2023ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி நடைமுறைக்குக் கொண்டு வருதல்.

* குறைந்த வருமானம் உள்ள மற்றும் சுமாரான வருமானம் உள்ள சுமார் 11 மில்லியன் கனடியர்களுக்குப் பணவீக்கத்தைச் சமாளிக்க ஒரு கொடுப்பனவை வழங்குவதல். இரண்டு பிள்ளைகள் உள்ள தம்பதியினருக்கு $467 வரையிலும், பிள்ளைகள் இல்லாத தனிக் கனடியர்களுக்கு $234 வரையிலும் கிடைக்கும்.

* மேம்படுத்தப்பட்ட கனடா பணியாளர்கள் கொடுப்பனவு (Canada Workers Benefit) மூலமாக, இவ்வாண்டில் குடும்பங்களுக்கு $2,461 வரையிலும், பிள்ளைகள் இல்லாத தனிக் கனடியர்களுக்கு



$1,428 வரையிலும் கிடைக்கும்.

* தகுதியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 12 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளுக்குப் பல் மருத்துவ செலவினத்தை ஈடுசெய்வதற்காக இரண்டு வருட காலத்தில் $1,300 வரையான, நேரடியான, வரி செலுத்தத் தேவையற்ற கொடுப்பனவு.

* வாடகைச் செலவினத்தால் சிரமப்படும் வருமானம் குறைந்தோருக்கு வரி செலுத்தத் தேவையற்ற $500 கொடுப்பனவு.

* 75 வயதை அடைந்த முதியோருக்கான Old Age Security (OAS) கொடுப்பனவில் செய்யப்படும் பத்து சதவீத அதிகரிப்புக் காரணமாக, முழு ஓய்வூதியம் பெறுவோருக்கு முதல் வருடத்தில் மேலதிகமாக $800 உதவி கிடைக்கும்.

* வரி செலுத்தத் தேவையற்ற கனடா சிறுவர் கொடுப்பனவு (Canada Child Benefit) வருடாந்தம் சுமார் 3.5 மில்லியன் குடும்பங்களுக்கு உதவுகிறது. இதன்மூலம் ஆறு வயதிற்கு உட்பட்ட ஒரு பிள்ளைக்கு $6,997 வரையும், ஆறு வயது முதல் 17 வயதுவரை $ 5,903 வரையும் கிடைக்கும்.

* மாசுக்களுக்குச் சமஷ்டி மட்டத்தில் விலைவிதித்து, காலநிலை மாற்றத்திற்கு எதிராகப் போராடும் அதேவேளை, கனடியர்களின் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கக் கூடியதாக்குதல். இது நடைமுறையில் இருக்கும் மாகாணங்களில் பத்தில் எட்டுக் கனடியர்கள் அவர்களுக்கு ஏற்படும் செலவை விடவும் அதிகமான பணத்தை மீளப் பெறுவார்கள்.

* நடுத்தர வருமானம் உள்ள கனடியர்கள் மீதான வரிகளைக் குறைக்கும் அதேவேளை, செல்வந்தர்களின் முதல் ஒரு சதவீதமானோர் மீது வரிகளை அதிகரித்தல்.

* நாடு தழுவிய இளமைக் கல்வி மற்றும் சிறுவர் பராமரிப்புத் திட்டம். இந்தத் திட்டத்தின் கீழ் ஆறு மாகாணங்களும், பிராந்தியங்களும் எதிர்பார்க்கப்பட்டதற்கு மிகவும் முன்பாகவே, 2023ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் திகதிகயளவில் நாளாந்தம் $10 அல்லது அதனிலும் குறைந்த செலவில் சிறுவர் பராமரிப்பை வழங்கவுள்ளன. ஏனைய மாகாணங்களிலும், பிராந்தியங்களிலும் நாளாந்தம் $10இற்குச் சிறுவர் பராமரிப்பு என்ற இலக்கு 2026ஆம் ஆண்டில் எட்டப்படும்.

**சுகாதாரப் பராமரிப்பு:** கனடாவில் உள்ள அனைவருக்குமான பொது சுகாதாரப் பராமரிப்பு முறையைப் பலப்படுத்துவதற்காக 2023ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டம் $198.3 பில்லியனை வழங்குகிறது. இது, தேங்கிப் போயுள்ள பணிகளைக் குறைப்பதற்கும், குடும்ப சுகாதார சேவையைப் பெறுவதை விரிவாக்குவதற்கும், கனடியர்கள் எதிர்பார்ப்பதும், அவர்களுக்கு உரித்துடையதுமான உயர் தரத்திலான பராமரிப்பை உரியநேரத்தில் பெறுவதை மாகாணங்களும், பிராந்தியங்களும் வழங்குவதை உறுதி செய்வதற்கு



பயன்படும்.

புதிய கனடா சுகாதாரப் பராமரிப்புக்கான கொடுப்பனவாக மாகாணங்களுக்கும், பிராந்தியங்களுக்கும் புதிதாக வழங்கப்படும் $46.2 பில்லியன், ஒவ்வொரு மாகாணத்தினதும் பிராந்தியத்தினதும் தேவைக்கு ஏற்றவாறாக வடிவமைக்கப்பட்ட இருதரப்பு ஒப்பந்தங்கள் மூலமான உதவிகள், தனிநபர் உதவிப் பணியாளர்களுக்கான (Personal Support Worker) ஊதிய உதவி மற்றும் ஒரு பிராந்திய சுகாதார முதலீட்டு நிதியம் ஆகியன இதில் அடங்குகின்றன.

**பல் மருத்துவம்:** கனடா பல் மருத்துவத் திட்டத்தை (Canadian Dental Care Plan) நடைமுறைப்படுத்துவதற்காக 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில், 2023-2024 முதல் ஐந்து வருட காலப்பகுதிக்கு $13 பில்லியனை ஹெல்த் கனடாவுக்கு வழங்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், காப்புறுதி அற்ற, $90,000 இற்கும் குறைவான வருடாந்த குடும்ப வருமானம் பெறும் கனடியர்களுக்கு பல் மருத்துவம் வழங்கப்படும். வருடாந்த குடும்ப வருமானம் $70,000இற்கும் குறைவான கனடியர்கள் பகுதிக் கொடுப்பனவைச் (Co-pay) செய்ய வேண்டிய தேவை இருக்காது. இந்த திட்டம் 2023ஆம் ஆண்டின் இறுதியில் செயற்பட ஆரம்பிக்கும். மூன்றாந்தரப்பு சேவை வழங்குநர் ஆதரவுடன், ஹெல்த் கனடாவால் இந்தத் திட்டம் நிர்வகிக்கப்படும்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில், வாய்ச் சுகாதார அணுகல் நிதியம் ஒன்றை அமைப்பதற்காக ஹெல்த் கனடாவுக்கு 2024-25 முதல் மூன்று ஆண்டுகளுக்கு $250 மில்லியனும், அதன்பின்னர் $75 மில்லியன் வீதமும் வழங்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த நிதியம், நலிவடைந்த மக்கள் குழுக்கள் மத்தியில் வாய் சுகாதாரப் பராமரிப்பில் உள்ள இடைவெளிகளை நீக்குவதற்கும், கிராமப்புறங்களிலும், எளிதில் சென்றடைய முடியாத சமூகங்களில் வாழ்வோர் உட்பட்ட சிகிச்சை பெறுவதற்கு நிலவும் தடைகளை நீக்குவதற்கும் குறிப்பான உதவிகளை வழங்குவதன்மூலம் கனடா பல் மருத்துவ திட்டத்திற்கு மேலதிக உதவியாக அமையும்.

### கருக்கலைப்பு, ஏனைய பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரச் சேவைகளையும் பெறுதல்

பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார நிதியத்தைப் புதுப்பிப்பதற்கு ஹெல்த் கனடாவுக்கு 2024-2025இல் இருந்து மூன்று வருட காலத்திற்கு 36 மில்லியன் டொலரை வழங்க 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கருக்கலைப்பையும், ஏனைய பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரப் பராமரிப்புத் தொடர்பான தகவல்களையும், சேவைகளையும் பெறுவதை இந்த நிதியம் மேலும் எளிதாக்கும்.

### குற்றங்களுக்கு எதிரான போராட்டமும் உயிர்களைக் காப்பதும்: ஓபியொய்ட் (Opioid) நெருக்கடிக்கு எதிரான நடவடிக்கை

புதுப்பிக்கப்பட்ட போதைப் பொருட்கள் தொடர்பான கனடிய மூலோபாயத்திற்கு (Canadian Drugs and Substances

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

Sam Surendran
Mortgage Broker
Licence # M16002312
647-922-5704
MORTGAGE ALLIANCE
Office: 1585 Markham Road, Unit 110, Scarborough ON. M1B 2W1
MORTGAGE OFFICE
GOOD SERVICE . GOOD LENDERS
GOOD RATES
Apply for your mortgage loan today
*Hiring Mortgage Agents, Commission Income
www.OKmortgages.ca

## நாமும் நமது இல்லமும் 629

# பணவீக்கம் மற்றும் கனடிய வட்டி வீதம்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனடியப் பொருளாதாரத்தில் எதிர் பார்த்தது போலவே பணவீக்கம் கட்டுப் பாட்டிற்குள் வரத் தொடங்கியுள்ளது. வட்டி வீத அதிகரிப்பு, பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதனைக் காணக் கூடியதாக உள்ளது. எதிர்பார்த்தது போலவே மார்ச் 2023, ஏப்ரல் 2023இல் கனடிய மத்திய வங்கி வட்டி வீதத்தில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. எனினும் எதிர்காலத்தில் வட்டி வீதத்தில் எவ்வாறு மத்திய வங்கி செயல்படும் என்பதனை இப்பொழுது கூற முடியாது. பொருளாதாரத்திலும், பணவீக்கத்திலுமே தங்கியுள்ளது.

கனடியப் பொருளாதார ஆய்வாளர்களின், அறிக்கையில் 2025இற்கு இடையில் கனடியப் பொருளாதாரம், மந்தநிலை அல்லது பொருளாதார சுருக்கம் (RECESSION) அடையும் என்பதில் ஒத்துப் போகின்றார்கள். மற்றும், ஆய்வாளர்களின் எதிர்பார்ப்புப்போல ஆதன விலை 2022 மார்ச் இல் இருந்து கீழ்முகமாகவே செல்கின்றது.



தொடர்ச்சியாக வட்டி வீதம், உயர்ந்த நிலையில் இருப்பதால், ஆதனத்திற்குரிய மாதாந்தக் கொடுப்பனவு கனடியர்களிற்கு மேலும் நெருக்கடியையே கொடுக்கின்றது. எனினும் புதிது புதிதாக வெளிநாட்டவர் கள் கனடாவிற்குள் வருவதாலும், வெளிநாட்டவரின் தொகையை 2025இல் 500,000வரை அதிகரிப்பதாக மத்திய அரசு கூறியுள்ளதாலும் அதிக ஆதனம் தேவைப்படும்.

ஆதன குடியிருப்புப் பற்றாக்குறையால் வாடகை அதிகரித்தே காணப்படும். எனினும் முதலீட்டாளர்களால் இதனை நிறைவேற்ற முடியுமா? அதாவது ஆதனத்தில் முதலீடு செய்து, அதில் இருந்து வருமானத்தைப் பெற முடியுமா?

வட்டிவீத அதிகரிப்பால், புதிதாகத் தொடங்க இருக்கும் ஆதன எண்ணிக்கை கயில் 2023இன் முதல் கால்பகுதியில் (Q1-2023) குறைவு ஏற்பட்டுள்ளது. 2022உடன் ஒப்பிடும்போது ஏறக்குறைய 30% குறைந்த அளவிலான ஆதனங்களே இவ்வருடம் நிர்மாண வேலைகளுக்குத் தொடங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படு கின்றது. அத்துடன் 30%ஆன புதிய ஆதனக்கட்டிடத் தொகுதிகள் முற்றாக நிறுத்தப்பட்டு விட்டன.

தமது வியாபார நோக்கத்திற்காக, பொறுப் பற்ற முறையில், ஏற்கனவே விற்கப்பட்ட, வீடுகள்/அடுக்குமாடி மனைகள் நிர்மாணம் செய்வதனை நிறுத்திய (cancel) தனிப்பட்ட மற்றும் நிறுவனங் களிற்கு எதிராக வழக்குகள் தொடரவும், தண்டம் செலுத்தவேண்டும் என்ற கோட்பாட்டை ஒன்ராறியோ அரசு ஏற்படுத்தியுள்ளது. இது ஒருவகையில் கனடிய மக்களிற்கு நம்பிக்கையை கொடுத்துள்ளது. எனினும், கனடியர்கள் சில பகுதிகளில் அடுக்குமாடி மனைகளில் முதலிடுவதில் மிகவும் கவனம் கொள்வ தனைக் காணக்கூடியதாக உள்ளது.

சில வருடங்களிற்கு முன்பு உள்ள நிலைமை முற்றாக மாறியுள்ளது. வாங்குவோர் மிகவும் கவனம் கொள்வதனைக் காணலாம்.

| நாடு | பணவீக்கம் |
|---|---|
| அர்ஜெண்டினா | 98.8% |
| ரஷ்யா | 11.8% |
| பிரித்தானியா(UK) | 10.1% |
| ஜெர்மனி | 8.7% |
| இந்தியா | 6.5% |
| அமெரிக்கா | 6.4% |
| பிரான்ஸ் | 6.2% |
| கனடா | 5.9% |
| ஜப்பான் | 4.3% |
| சீனா | 2.1% |

கடந்த ஆண்டில் உச்சத்திலிருந்த கனடிய பணவீக்கம் இறங்கி வருகின்றது. மேலுள்ள அட்டவணையில் சீனாவின் பண வீக்கம் மிகவும் குறைவாகக் காணப்படு வதனைக் காணலாம். எதிர்காலத்தில் சீனாவினதும், அமெரிக்காவின்

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)




# புதிய...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

Strategy) ஆதரவளிப்பதற்காக 2023-2024 முதலான ஐந்து வருட காலத்திற்கு $359.2இனையும், தொடரும் கொடுப்பன வாக $5.7 மில்லியனையும், எஞ்சிய



கடனீட்டுச் செலவாக $1.3 மில்லியனையும வழங்குவதற்கு 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கனடியர்களின் உயிர்களைக் காத்து, அவர்களின் சுகாதாரத்தையும், பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான அரசின் செயற்பாட்டுக்கு இது வழிகாட்டும். இந்த நிதி, சமூகங்களுக்கான உதவிகள், தடுப்புச் செயற்திட்டங்கள், மேற்பார்வையுடன் போதைப் பொருட்களைப் பயன்படுத்தும் நிலையங்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தலை தடுப்பதற்கான நடவடிக்கைகள் போன்றவற்றுக்கும் பயன்படுத்தப்படும்.

## தற்கொலை தடுப்புக்கான 988 தொலைபேசி இலக்கத்தைச் செயற்படுத்தல்

2023ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் 988 இலக்கத்தைச் செயற் படுத்துவதற்கு உதவியாகக் கனடியப் பொது சுகாதார அமைப்புக்கு 2023-2024 முதலான மூன்று ஆண்டுகளில் $158.4 வழங்கப்படும். 2023 நொவம்பர் 30ஆம் திகதியின் பின்னர், கனடியர்கள் 988 இலக்கத்திற்கு எந்த நேரமும் அழைப் பெடுத்தோ, குறுஞ்செய்தி அனுப்பியோ தரமானதும், செயற்திறனுள்ளதும், உடனடியானதுமான தற்கொலைத் தடுப்பு மற்றும் மனநல நெருக்கடிக்கான உதவிகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

# பணவீக்கம்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

பொருளாதார மாற்றம் எவ்வாறு இருக்கும் என்பது, எதிர்காலத்தில் நடைபெற இருக்கும் உலக அரசியல் நிலைப்பாட்டிலேயே தங்கியுள்ளது. குறிப்பாக, தைவான் மற்றும் உக்ரைனின் அரசியல் நிலைமை பொருளாதாரத்திலும் மாற்றத்தை உருவாக்கலாம்.

இதன் தொடர்ச்சியாகவே கனடியப் பொருளாதாரமும் தங்கியுள்ளது. எனினும் அண்மைக்கால தரவுகள் பொருளாதாரம் மந்த நிலையிலேயே செல்வதனைக் காணக்கூடியதாக உள்ளது.




# பயங்கரவாத...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

மீளப் பெறப்பட வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது. குறித்த சட்டத்தின் ஊடாக மனித உரிமைகளை மீறுவதற்கு, அதிகாரிகளுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு பயங்கரவாத எதிர்ப்பு சட்டமும் சர்வதேச மனித உரிமை தரங்களைப் பாதுகாக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் அமைதியான விமர்சகர்களின் குரலை ஒடுக்குவதற்கும் சிறுபான்மையினரை குறிவைக்கும் செயற்பாடுகளுக்கும் அனுமதியளிக்கும் என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு- ஆளும் தரப்பினர், எதிர் கட்சிகள், மனித உரிமை அமைப்புகள் என அனைத்து தரப்பினரதும் எதிர்ப்புகள், விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் நாடாளுமன்றத்தில் முன்வைக் கப்படும் இந்த சட்டமூலம் வெறியடையுமா என்பது சந்தேகமே. எனினும், குறித்த சட்டமூலத்தில் திருத்தங்களை, மாற்றங் களை ஏற்படுத்தி சட்டமூலத்தை வெற்றி பெறச் செய்ய நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸ முயற்சி மேற்கொண்டு வருவதாகத் தெரிகின்றது.

> "நீங்கள்தான் முக்கியம்" என்று தொடங்கும் உறவுகள் "யார் நீ" என்று முடிவடைகிறது.



# நானிலம் போற்றும் நட்பு - 19



- அகணி -
authorakani@gmail.com

"கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளஞ் சுடும்." (அதிகாரம் நட்பாராய்தல், குறள் 799) என்ற குறளிற்கு "கேடு வரும் காலத்தில் கைவிட்டு ஒதுங்குகின்றவரின் நட்பு, எமன் கொல்லும் காலத்தில் நினைத்தாலும் நினைத்த உள்ளத்தை வருத்தும்" என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"துன்பம் வந்தபோது கைவிட்டுச் சென்ற வர் நட்பைச் சாகும்போது நினைத்தாலும் உள்ளத்தைச் சுட்டெரிக்கும்" என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.


"ஆபத்தில் உதவாதார் நட்பைச் சாகும் காலத்தில் நினைத்தாலும் துன்பந் தரும்" என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

நண்பருக்குத் துன்பம் வரும்போது ஒதுங்கிக் கொண்டால் குற்ற உணர்வு சாகும்போது கூடச் சுட்டெரிக்கும் என்ற அறிவுரையை இந்தக் குறள் வழங்குகிறது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய 'திரிகடுகம்' என்ற நூலில் உள்ள மேலும் சில பாடல்களில் உள்ள நட்பு பற்றிய கருத்துக்களை கவனிப்போம். திரிகடுகம் இயற்றியவர் நல்லாதனார் அவர்கள். உரையாசிரியர் பால சங்கரன் அவர்களின் உரையினைத் துணையாகக் கொண்டு ஆராய்வோம்.

திரிகடுகம் - பாடல் 55
"அரு மறை காவாத நட்பும், பெருமையை
வேண்டாது விட்டு ஒழிந்த பெண்பாலும்,
யாண்டானும்
செற்றம் கொண்டாடும் சிறு தொழும்பும், -
இம் மூவர்
ஒன்றாள் எனப்படுவார்."
செற்றம்-கோபம், ஒன்றாள் - வேவுக்காரர்
மறைமொழியை வெளிப்படுத்தாத நட்பும், பெருமைக் குணத்தை விரும்பாத தலைவனும், தர்மத்தின் நீங்கிய பெண்ணும் ஒற்றர்கள் என்று சொல்லப்படுவர்.

திரிகடுகம் - பாடல் 58
"பழமையை நோக்கி, அளித்தல்,
கிழமையால்
கேளிர் உவப்பத் தழுவுதல், கேளிராத்
துன்னிய சொல்லால் இனம் திரட்டல், -
இம் மூன்றும்
மன்னர்க்கு இளையான் தொழில்."
கிழமை _ உரிமை, கேளிர் - உறவினர்
முன்னோரோடு பழகியவர்களைக் காப்பதும், சுற்றத்தாரைக் காப்பாற்றுவதும், நல்லினத்தாருடன் நட்பு கொள்வதும் இளவரசன் செய்ய வேண்டியவைகளாகும்.

திரிகடுகம் - பாடல் 63
"நேர்வு அஞ்சாதாரோடு நட்பும், விருந்து
அஞ்சும்
ஈர்வளையை இல்லத்து இருத்தலும், சீர்
பயவாத்
தன்மையிலாளர் அயல் இருப்பும், - இம்
மூன்றும்
நன்மை பயத்தல் இல."
நேர்வு - துன்பம்
துன்பத்துக்கு அஞ்சாதவர் நட்பும், விருந்தினர்க்கு உணவளிக்காத மனைவியும், நற்குணமில்லாதவர் அயலில் குடியிருத்தலும் பயனற்றவை ஆகும்.




திரிகடுகம் - பாடல் 64
"நல் விருந்து ஓம்பலின், நட்டாளாம்
வைகலும்
இல் புறஞ் செய்தலின், ஈன்ற தாய் தொல்
குடியின்
மக்கள் பெறலின், மனைக் கிழத்தி - இம்
மூன்றும்
கற்புடையாள் பூண்ட கடன்."
புறஞ் செய்தல் - காத்தல்
விருந்தினரைப் போற்றுதலால் நட்பானவள் ஆவாள். இல்லறத்தைக் காப்பதால் பெற்ற தாய் ஆவாள். மக்களைப் பெறுதலால் மனையாள் ஆவாள். இம்மூன்றும் கற்புடைய பெண்களின் கடமைகளாகும்.

திரிகடுகம் - பாடல் 82
"சான்றாருள் சான்றான் எனப்படுதல், எஞ்
ஞான்றும்
தோய்ந்தாருள் தோய்ந்தான் எனப்படுதல்,
பாய்ந்து எழுந்து
கொள்ளாருள் கொள்ளாத கூறாமை, -
இம் மூன்றும்
நல் ஆள் வழங்கும் நெறி."
சான்றோர் - பெரியோர்,
நல் ஆள் - நல்லவர்
நற்குணங்கள் நிறைந்தவர்களால், நல்லோன் எனப்படுதலும், செல்வம் இருந்தபோதும், இல்லாதபோதும் நட்புடன் கருதப்படுதலும், தமது நற்சொல்லை ஏற்றுக் கொள்ளாதவரிடத்து சொல்லா திருத்தலும் நல்லவர் குணங்களாகும்.

திரிகடுகம் - பாடல் 83
"உப்பின் பெருங் குப்பை, நீர் படின்,
இல்லாகும்
நட்பின் கொழு முளை, பொய் வழங்கின்,
இல்லாகும்
செப்பம் உடையார் மழை அனையர் -
இம் மூன்றும்
செப்ப நெறி தூராவாறு."
குப்பை - குவித்தல், செப்பம் உடையார் -
சான்றோர்
உப்பின் குவியல் மீது நீர் படிந்தால் உப்பு கரைந்து போகும். நட்பில் பொய் வந்தால் கெட்டுப் போகும். நடுநிலைமையுடையர் மழை போல் எல்லோருக்கும் உதவி செய்வர். இம்மூன்றும் நல்ல நெறிகளைக் கெடுக்கா முறைகள் ஆகும்.

திரிகடுகம் - பாடல் 86
"அற்புப் பெருந் தளை யாப்பு நெகிழ்ந்து
ஒழிதல்
கற்புப் பெரும் புணை காதலின் கை
விடுதல்,
நட்பின் நய நீர்மை நீங்கல், - இவை
மூன்றும்
குற்றம் தரூஉம் பகை."
யாப்பு - கட்டு

உயிரிடத்தில் அன்பு காட்டாதிருத்தலும், பொருள் மீது கொண்ட விருப்பத்தினால் கல்வியை விட்டுவிடுதலும், ஒருவரிடம் கொண்ட நட்பால் நீதித் தன்மையினின்று நீங்குதலும் குற்றங்களை விளைவிக்கின்ற பகைகளாம்.

திரிகடுகம் - பாடல் 97
"ஐங் குரவர் ஆணை மறுத்தலும், ஆர்வு
உற்ற
எஞ்சாத நட்பினுள் பொய் வழக்கும்,
நெஞ்சு அமர்ந்த
கற்பு உடையாளைத் துறத்தலும், - இம்
மூன்றும்
நற் புடையிலாளர் தொழில்."
நற்புடை - அறம்

பெரியோர்களுடைய கட்டளையை மறுத்து நடத்தலும், நண்பனிடம் பொய் பேசுதலும், கற்புடைய மனைவியைத் துறத்தலும், பாவச் செயல்கள் ஆகும்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய ஏலாதி நூலின் ஆசிரியர் கணிமேதாவியார். கணிமேதை என்றும் இவர் வழங்கப் பெறுவர். ஏலாதி நூலில் உள்ள நட்பு பற்றிய கருத்துக்களை உரையாசிரியர் பால சங்கரன் அவர்களின் உரையினைத் துணையாகக் கொண்டு ஆராய்வோம்.

ஏலம் என்பது ஆதியான ஆறு பொருள் கள் சேர்ந்த ஒரு வகைச் சூர்ணம் என மருத்துவ நூல்களில் கூறப்பெறும். ஏலம் ஒரு பங்கு, இலவங்கப்பட்டை இரண்டு பங்கு, நாககேசரம் மூன்று பங்கு, மிளகு நாலு பங்கு, திப்பிலி ஐந்து பங்கு, சுக்கு ஆறு பங்கு என்ற அளவுப்படி சேர்த்து இம் மருந்தை ஆக்குவர். ஏலாதி நூலும் ஒவ்வொரு பாடலிலும் ஆறு பொருள்களைப் பெற்று, உயிருக்கு உறு துணையாக அற நெறியை விளக்கி உரைக்கும் ஒப்புமை பெற்றமையால் இப் பெயரைப் பெற்றுள்ளது.

ஏலாதி - பாடல் - 8
"உடன்படான், கொல்லான், உடன்றார்
நோய் தீர்த்து,
மடம் படான், மாண்டார் நூல் மாண்ட
இடம் பட
நோக்கும் வாய் நோக்கி,
நுழைவானேல், - மற்று அவனை
யாக்குமவர் யாக்கும், அணைந்து."
மடம் படான் - அறியாமையில் மயங்கானாய், யாக்குமவர் - நண்பராக்கி கொள்வானை
ஒன்றினைப் பிறர் கொல்ல உடன்படாது, தானுங் கொல்லாது, பிணியால் வருந்தினார் நோயைத் தீர்த்து, அறியாமை இல்லாதவனாய் சான்றோருடைய சிறந்த கருத்துகள் புலனாகும்படி ஆராய்ந்து, அதற்கு தக்கபடி வாழ்பவனை நண்பராக்கிக் கொண்டால் அவ்வியல்புகள் நம்மையும் மேம்படுத்தும்.

ஏலாதி - பாடல் - 15
"கண் போல்வார்க் காயாமை, கற்றார்,
இனம் சேர்தல்
பண் போல் கிளவியார்ப் பற்றாமை பண்
போலும்
சொல்லார்க்கு அரு மறை சோராமை
சிறிது எனினும்
இல்லார்க்கு இடர் தீர்த்தல் - நன்று."

பற்றாமை - பின்பற்றாமை, அருமறை - அருமையான மறை பொருள்களை
ஒருவன் தனக்கு உற்ற நண்பர்களை உடையவனும், கற்றவர்களைச் சேர்தலும், மென்மையான பெண்ணின் பேச்சைக் கேட்காமையும், இசையினைப் போல் பேசக்கூடிய பெண்களுக்கு அருமையான மறை பொருள்களை மறந்தும் சொல்லாமையும், இல்லை என்பவர்களின் துன்பத்தைத் தீர்த்தலும் நல்லவாம்.

நீதி நூல்களான திருக்குறள், திரிகடுகம், ஏலாதி போன்றவற்றில் நட்பு பற்றிய அறிவுரைகள் வரும் சில பாடல்களில் உள்ள கருத்துக்களை ஆராய்ந்தோம்.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# இந்தியாவில் 2024இல் ஆட்சி மாற்றம் இருக்கும்!

## நேர்காணல்: ஆ. ராசா நேர்கண்டவர்: கண்ணன்

தமிழ்நாட்டில் திராவிட அரசியலில் இன்றும் கொள்கை பிடிப்புடன் இருக்கும் மிகச் சில அரசியல்வாதிகளுள் ஒருவர், ஆ. ராசா. திராவிட இயக்கத்தில் வளர்ந்து திமுகவுக்கு வந்து, இந்திய ஒன்றிய அரசின் முன்னாள் அமைச்சராக உயர்ந்தவர். இந்தியாவையே உலுக்கிய '2ஜி அலைக்கற்றை' பிரச்சினையின் நாயகன். தற்போது திமுக துணைப் பொதுச் செயலாளராகவும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினராகவும் உள்ளார். சென்னையில் உள்ள ஆ. ராசா இல்லத்தில் இந்த நேர்காணலுக்காக சந்தித்தோம்.

**திமுக முன்னாள் தலைவரும் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சருமான கருணாநிதி, அன்றைய திமுக இரண்டாம் நிலை தலைவர்களில் முதன்மையானவரான முரசொலி மாறன் இருவரின் செல்லப் பிள்ளையாக வளர்ந்தவர் நீங்கள். இவர்கள் இருவரின் இழப்பு உங்கள் வாழ்க்கையில் எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?**

நான் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகும் முன்னர் என்னை கலைஞரிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தியது, இன்று தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சராக இருக்கிற அண்ணன் கே.என். நேரு அவர்களும் என்னுடைய மாவட்டச் செயலாளர் அண்ணன் மறைந்த சிவசுப்பிரமணியன் அவர்களும்தான். இவர்களால்தான் கலைஞர் பரிச்சயம் கிடைத்தது. அது அண்ணன் வைகோ திமுகவில் இருந்து பிரிந்த காலம்.

நான் நாடாளுமன்ற உறுப்பினராக ஆன பின்னர் அண்ணன் முரசொலி மாறன் அவர்கள் பரிச்சயம் கிடைத்தது. திராவிட இயக்க சிந்தனையோடு பொருந்திய, கூட்டாட்சி தத்துவத்தை உணர்ந்த, சரளமாக ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்கள் இருந்தால்தான், இந்திய நாடாளுமன்றத்தில் திராவிட இயக்கத்தை அடையாளப்படுத்த முடியும் என்பது முரசொலி மாறன் எண்ணம். அப்படிப்பட்ட ஆட்களைத்தான் அவர் தூக்கிவிட முயற்சிப்பார், அவர்களை தேடிக்கொண்டும் இருந்தார். இந்நிலையில் நான்



அவருடைய கைகளில் கிடைத்தேன். அவரோடு பேசுகிற போது, நாடாளுமன்றத்தில் நான் பேசுவதைக் கேட்ட போது, என்னை ஊன்றிக் கவனித்த அண்ணன் முரசொலி மாறன், திராவிட சிந்தனையும் சரளமான ஆங்கிலமும் இருந்த காரணத்தால், தலைவர் கலைஞரிடம் பரிந்துரை செய்து, ஒன்றிய அரசில் இணை அமைச்சராகிற வாய்ப்பை எனக்கு வாங்கிக் கொடுத்தார்.

இணை அமைச்சராக, பின்னர் துணை அமைச்சராக, முக்கிய அமைச்சராக இருந்தபோது கலைஞருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது என்னிடம் இருந்த திராவிட இயக்க சிந்தனையைப் பார்த்து, நான் திராவிடர் கழகத்தில் இருந்த காலத்தை ஆசிரியர் வீரமணியுடன் கலந்து பேசித் தெரிந்து கொண்டார். எனது ஆங்கிலப் புலமை, திராவிட சித்தாந்தம், எதையும் எதிர் கொள்ளும் துணிவு ஆகியவற்றால் என்னை அருகிலே வைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் கலைஞருக்கு இருந்தது.

கலைஞர் என்கிற மிகப்பெரிய ஆளுமைக்கு பக்கத்தில் போனபின்னர், அவருடைய நம்பிக்கையை ஒரு அங்குலம் கூடக் குறைத்துக்கொள்ளக் கூடாது என்று மிகக் கவனமாக அவருடன் பயணிக்க வேண்டியிருந்தது. இந்நிலையில் 2ஜி வழக்கு வந்தது. அதில் நான் எப்படி வாதாடினேன் என்பது அவருக்குத் தெரியும். தன்னந்தனியாக நான் எப்படிப் போராடிக் கொண்டு இருக்கிறேன் என்பதைப் பார்த்து என்னை அவர் உச்சி முகர்ந்த காலங்கள் உண்டு. கெடுவாய்ப் பாகத் தீர்ப்பைப் பார்க்க அவர் இல்லை.

இன்று, ஒரு தாய் _ தந்தையரை இழந்த குழந்தை எப்படி இருக்குமோ அப்படித் தான் அண்ணன் முரசொலி மாறன் அவர்களையும் தலைவர் கலைஞர் அவர்களையும் இழந்த மனநிலை எனக்கு. ஆனால், தாய் _ தந்தையை இழந்த குழந்தை மேல் எப்படி பாசத்தை, பரிவை காட்டுவார்களோ அப்படிப்பட்ட பரிவை பாசத்தை என்மீது தமிழ்நாட்டின் இன்றைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் காட்டுகிறார் என்பதுதான் எனக்கு இருக்கும் ஆறுதல்.

**கருணாநிதி காலகட்ட அரசியலையும் பார்த்துள்ளீர்கள், இன்று அவருக்குப் பிறகான அரசியலையும் பார்க்கிறீர்கள். இவ்விரண்டு காலகட்டத்துக்கும் இடையே என்ன வித்தியாசத்தை உணர்கிறீர்கள்?**

இன்றைய முதலமைச்சர் ஒரு வெகுமக்கள் முதலமைச்சராக இருப்பார். நலத்திட்டங்கள் கொடுக்கும் அரசை நடத்தும் முதலமைச்சராக இருப்பார் என்பதில் எனக்கு சந்தேகம் இருக்கவில்லை. ஆனால், அண்ணாவைப் போல், கலைஞரைப் போல் திராவிட தத்துவத்தை உயர்த்திப் பிடிக்கிற ஒரு முதலமைச்சராக இருப்பாரா என்கிற ஐயப்பாடு எனக்கு இருந்தது. கலைஞரின் தத்துவ அடர்த்தி இவரிடம் இருக்காதோ என்று நினைத்தேன்.

உதாரணமாக எம்.ஜி.ஆர். ஒரு வெகுமக்கள் அரசாங்கத்தை நடத்தினார். ஆனால், அவரை தத்துவத்தின் அடையாளம் என்று சொல்லமாட்டேன். அதுபோல் ஜெயலலிதா மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முதலமைச்சர். அதற்காக திராவிட தத்துவத்தின் தலைவர் என்று ஜெயலலிதாவை ஒரு காலமும் நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஆனால், தத்துவத்தின் அடையாளமாக இருப்பதுதான் முக்கியம் என்ற எதிர்பார்ப்பு எனக்கு.

இந்நிலையில், என் ஐயப்பாடு எல்லாவற்றையும் உடைத்துவிட்டார் இன்றைய முதலமைச்சர். அவருக்கு சமூகநீதி கொள்கையில் இருக்கிற பிடிப்பு, திராவிட மாடலை முன்னெடுப்பதை எல்லாம் பார்த்து, அவரை ஐயப்பட்டதற்காக எனக்கு என் மேலேயே ஒரு வெறுப்பு வந்தது. அதை அவருக்கே ஒரு நாள் மெசேஜ்ஜாக அனுப்பிவிட்டேன். அப்படி நினைத்ததுக்காக எனக்கு வெட்கமாக இருக்கிறது என்றுகூட சொன்னேன்.


அண்ணா காலத்தில் ஜனசங்கம் இல்லை. கலைஞர் காலத்தில் பாஜக இருந்தது, ஆனால், தன் கட்டுப்பாட்டில் கக்கத்தில் வைத்திருந்தார் கலைஞர். இன்று அண்ணா இல்லை, கலைஞர் இல்லை, பெரியார் இல்லை. ஆர்.எஸ்.எஸ். ஓங்கி நிற்கிறது. ஒன்றியத்தில் ஒன்பது ஆண்டுகாலம் ஆட்சியில் இருக்கிறது பாஜக. இந்நிலையில், அண்ணா _ கலைஞரின் கூட்டுக் கலவையாக, திராவிட மாடல் என்று சொல்லி, ஆரியத்தை ஆர்.எஸ்.எஸ்ஸை வேரறுக்கிற ஒரு வீரியம் மிக்க தலைவராக முதலமைச்சர் உயர்ந்து நிற்கிறார். இதைப் பார்த்து உள்ளபடியே நான் புளகாங்கிதம் அடைகிறேன். அவரை குறைத்து மதிப்பிட்டுவிட்டேன் என்பதற்கு வெட்கப்படுகிறேன்.

**இந்திய தேசிய அரசியலில் மு.க. ஸ்டாலின் முக்கிய பங்கு வகிக்கிறார் என்று நீங்கள் சொல்கிறீர்கள். சிலர் அவரை பிரதமர் வேட்பாளராகக்கூடப் பரிந்துரை செய்கிறார்கள். ஆனால், அதற்கு பாஜகவினர் விமர்சனம் வைக்கிறார்களே? தேசிய அரசியலே தெரியாதவர் தேசிய அரசியலுக்கு வர முடியுமா என்று முதல்வர் ஸ்டாலினைக் குறித்து தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை பேசியிருக்கிறாரே?**

திராவிட முன்னேற்றக் கழகம் இதுவரை தேசிய அரசியலில் பங்கெடுக்கவில்லை என்றால் இந்த வாதத்தை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், திமுக தேசிய அரசியலில் பங்கெடுத்து, திமுகவினர் ஒன்றிய அமைச்சர்களாக இருந்துள்ளனர். இந்தக் கட்சியின் இளைஞரணி செயலாளராக இருந்து ஐம்பதாண்டு காலம் அரசியலை ஊன்றி கவனித்தவர், மு.க. ஸ்டாலின். திமுக எப்போதெல்லாம் ஒன்றிய அரசில் பங்கெடுத்துள்ளதோ அப்போதெல்லாம் திமுகவின் ஆளுமை மிக்க இரண்டாம் கட்ட தலைவர்களில் ஒருவராக இருந்தார். மாநில அமைச்சராக இருந்தார். பின்னர் அந்தக் கட்சியின் தலைவராக இருக்கிறவர், இப்போது முதலமைச்சராகவும் இருக்கிறவர். இவ்வளவு பின்புலம் இருக்கிறவருக்கு தேசிய அரசியல் தெரியாது என்று சொல்வது அறிவின்மை, முட்டாள்தனம்.

**இன்று தேசிய அளவில் பாஜகவுக்கு எதிராக எதிர்க் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சியை திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் எடுக்கிறார். இது சாத்தியமாகுமா?**

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)




A METROPIA MASTER-PLANNED COMMUNITY
UNLIMITED LIVING.
UNIONCITY in Downtown Markham
• FREE ASSIGNMENT FOR A LIMITED TIME ONLY
• FREE RIGHT TO LEASE
• CAPPED DEVELOPMENT CHARGES
• 15% DEPOSIT ONLY BEFORE CLOSING
UnionCity is conveniently situated just steps away from Unionville GO Station, York University Markham Campus, and Markham PAN AM Centre.


LAWRENCE HILL
Luxury Urban Towns
$5000 Travel Voucher!!
1 Year Free Maintenance
Free EV Parking Upgrade*
Right to Lease
Free Assignment
Capped Development Charges
Private outdoor spaces (balconies and rooftop terraces)
10% Deposit Only *
CONTACT OUR SALES TEAM
(416) 569-4948 | (647) 296-0596




